Volume 8 Issue 1 August 2026 E-ISSN: 2582-2063

# பழந்தமிழர் வாழ்வில் நேரம், சகுணங்கள் தொடர்பான நம்பிக்கைகள் – ஒரு பன்பாட்டு நோக்கு


## முனைவர் செ. கலாராணி

**இணைப்பேராசிரியர், முதுகலை வரலாற்றுத்துறை**
**நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி (தன்னாட்சி)**
**நாகமலைப், புதுக்கோட்டை, மதுரை**


**முன்னுரை**

இவ்வுலகில் அனைத்து இனத்தவர்க்கும் வாழ்வியல் சார்ந்த நம்பிக்கைகள் உண்டு . குறிப்பிட்ட இனத்தவரின் தொழில்வாழிடம் , வாழ்க்கைமுறைகள், பொருளாதாரச் செயல்பாடுகள் போன்றவை அவர்களின் நம்பிக்கைக்கு ஆதாராமாகவும் ஆரம்பமாகவும் விளங்குகின்றன. சங்க காலத்தில் வேட்டுவர் இனத்தைச் சார்ந்த மக்கள் , அது சார்ந்த ஆயுதங்கள், உணவு, உடை, பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர் . பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பெரும்பாலான நம்பிக்கைகள் அச்சத்தின் விளைவாகவே தோன்றியிருந்தன . குகைகளில் வாழ்ந்து உணவு சேகரிப்பானாக இருந்த மனிதன் இயற்கையைக் கண்டு அஞ்சி அதனையே வணங்கினான் . இடி, மின்னல், காற்று, தீ ஆகிய அவனின் நம்பிக்கையில் முதன்மையானது . இன்றும் தமிழரிடையே இருந்து வரும் பல நம்பிக்கைகள் மிகப் பழமையானவை . நன்மையின் மீதுள்ளபற்றையும் தீமையின் மீதுள்ள வெறுப்பையும் கொண்டே பழந்தமிழர்களின் நம்பிக்கைகள் அமைகின்றன . சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் , கால மாறுபாடுகளைக் கடந்தும் பழந்தமிழர் நம்பிக்கைகள் மற்றும் அவர்களின் வாழ்வியல் முறைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது . தமிழர்களின் ஒவ்வொரு செயலையும் அவர்களின் நம்பிக்கையே இயக்குகின்றன .

**நல்ல நாளும் – நேரமும்**

தாம் தொடங்கும் எந்த செயலும் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவது மனித இயல்பு , பழந்தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல . நல்ல நாள் நேரம் மற்றும் கோள் பார்த்து துவங்கும் எந்தவொரு செயலும் வெற்றி பெறும் என்று நம்பினர் . இதற்கு வரலாற்று ரீதியிலான ஆவணங்கள் இல்லையெனிலும் இலக்கிய ஆதாரங்கள் உண்டு . வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இவ்வாறான பழக்கங்கள் இல்லை . சங்கம் மருவிய காலத்தில் உருவான வடமொழி கலப்பும், புராண இதிகாசதாக்கமும் பழந்தமிழர்களிடையே எண்ணற்ற பழக்கவழக்கங்களை உருவாக்கியது. தமிழகத்தில் அதிகமாகப் பரவிய சமணமும் பல புதிய பழக்கவழக்கங்களுக்கு அச்சாரமிட்டது . இதன் காரணமாக தமிழர்களுக்கு நாளும் , கோளும் பார்த்து ஒரு செயலைத் தொடங்க வேண்டும் என்ற வழக்கம் தோன்றியது . தமிழ்ச் சமூகத்தில் அந்தணர்கள் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கிய பின்னர் நம்பிக்கைகள் மற்றும் பழந்தமிழர் வாழ்வியலில் மிகப் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டன . மன்னர்கள் போர் துவங்கும் முன்னர் தம் குடையையும் வாளையும் நல்ல நேரத்தில் வைத்து வணங்கி விட்டு தாம் செல்ல விரும்பிய திசையில் எடுத்துச் சென்றனர் . இதை குடைநாட் கோள்வாள் நாட்கோள் என்கிறது தொல்காப்பியம். திருமணத்திற்கும் தலைவன் தலைவி கூடுவதற்கு நல்ல நாள் பார்த்தனர் . சகுணங்களில் பழந்தமிழர்கள் நம்பிக்கை கொண்டனர் . மலையமான் திருமுடிக்காரி பற்றி கபிலர் பாடும்பொழுது பரிசிலர் கெட்ட நாள் மற்றும் கெட்ட சகுணம் அமைந்த பொழுதும் கூட அவனைத் தேடிச் சென்றடைந்தால் நிச்சயம் நன்மை கிடைக்கும் என்கிறார் .

**"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்**
**பதனன்று புக்குத்திறன்ன்று மொழியினும்**
**வறிது பெயர்குநரல்லர் "**

என்று புறநானூற்றுப் பாடல் (124) அதியமான் நெடுமான் அஞ்சி மற்ற மன்னர்களைப் போல் அல்லாமல் நாளும் புள்ளும் போர்களத்திற்கு செல்வான் என்கிறது .

சங்ககாலத்தில் போரில் இறந்து பட்ட வீரனுக்கு நினைவாக நினைவுக்கல் எடுப்பது மரபு . இறந்து போன வீரனின் நினைவாக அவனின் இரத்தவழி உறவினரோ அல்லது அந்த நாட்டு அரசனோ நடுகல் எடுப்பர் . அவ்வாறு நடுகல் எடுக்கும் போது நிமித்திகனிடம் (ஜோதிடர்) குறிகேட்டு நல்ல நாள் , நேரம் மற்றும் இடத்தை தேர்வு செய்வர் . வீரனுக்கு நினைவுக்கல் வடிக்ககல் தேர்வு செய்தல், அதனைத் குளிப்பாட்டுதல் உள்ளிட்டவைகள் சங்ககாலத்தில் நல்ல

நாள், நேரம் பார்த்தே நடை பெற்ற செய்தியை புறநானூறு , தொல்காப்பியம் குறிப்பிடுகின்றன.

திருவள்ளுவரும் ஒரு செயலைச் செய்து முடிக்க ஏற்ற கருவிகளுடன் அதற்கான காலம் உணர்ந்து செயல்பட்டால் செல்ல முடியாத செயல் ஒன்றுமில்லை அது நிச்சயம் நிறைவேறும் என்பதை

**"அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின் "**

என்ற குறள் மூலம் விளக்குகிறார் . பண்டைய தமிழர்கள் செயலில் மட்டுமல்ல தமது பழக்கவழக்கங்களிலும் ஒரு குணமாகவே காலத்திற்கு முக்கியத்துலம் கொடுத்துள்ளனர் .

அறிவுடையோர் உடனேயே கோபத்தை வெளிக்காட்ட மாட்டார்கள் எதிரியை வெல்ல ஏற்ற காலத்தை எதிர்பார்த்து உள்ளம் நொந்து இருப்பார்கள்.

**"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர் " (குறள் 487)**

என்ற குறள் மேற்கண்ட விளக்கத்தை உறுதி செய்கிறது . நேரத்தின் மதிப்பை மிகச்சரியாக உணர்ந்தவர்கள் தமிழர்கள் ஆவர் . "காலம் பொன் போன்றது " என்ற பழமொழி தமிழர்கள் நேரத்தை தங்கம் போல உயர்வாக கருதினர் என்பதற்கு சான்றாகும் . மேலும் "காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருக்காது " "இளமையில் கல் " "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செல்வோம் " அதிர்ஷடம் அடிக்கும் போது நழுவ விடாதே " உள்ளிட்ட பழமொழிகள் தமிழர்களின் நேர மேலாண்மை மற்றும் சரியான நேரத்தில் சரியானவற்றை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

**சொற்பலன்**

வாழ்வில் ஒரு காரியத்தைத் தொடங்கும் போதே முக்கிய முடிவுகள் எடுக்கும் முன்னர் திடீரென காதில் கேட்கும் பிறர் கூறும் சொற்களைச் சகுணமாக பார்க்கும் வழக்கம் பழங்காலத்திலிருந்து தமிழர்களிடையே வழங்கி வருகின்றது . இதனை அசரீரிவாக் கென்றும் அருள்வாக்கன்றும் கூறுவர் . தமிழ் இலக்கியங்கள் இதனை "விரிச்சி" என கூறுகின்றன . பசுவினைக் கவரச் செல்லும் முன்னர் மறவர்கள் பாக்கத்திற்கு சென்று விரிச்சியோர்வர் என்கிறார் தொல்காப்பியர் போர் தொடங்கும் முன்னர் தினை தூவி , ஆட்டுக்கடா குருதி தெளித்து விரிச்சியோர் தல் வழக்கம் என்கிறது பின்வரும் புறநானூறு வரிகள்

**"யாமத்துச்**
**செங்காய் வெட்சித் தினையும் தூஉய்**
**மறிக்குரல் குருதி மன்றுது களவிப்ப**
**விரிச்சி யோர்தல் வேண்டா "**

**கண்துடித்தல்**

உடலின் அங்க அசைவுகள் தொடர்பினாலும் சகுணங்கள் பார்க்கும் முறை தமிழர்களிடையே இன்றும் பரவலாக காணப்படுகிறது . பெண்களுக்கு இடது கண் துடித்தால் நன்மை ஏற்படும் என்றும் ஆண்களுக்கு வலது கண் துடித்தால் நன்மை என்றும் இடது கண் துடித்தால் தீமை ஏற்படும் என்றும் நம்பிக்கை இருந்து வருகிறது.

**"பல்லியும் பாங்கொத்தி சைத்தன**
**நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே "**

என்ற கலித்தொகை பாடல் வரிகள் பல்லியும் நல்ல திசையில் பேசியது , இடது கண்ணும் துடித்தது. எனவே தலைவன் விரைவில் வருவான் என்று தோழியிடன் கூறி மகிழ்ந்தாள் தலை விசங்க காலத் தமிழர்களின் முக்கிய விழாவான இந்திரவிழா நாளில் கண்ணகியின் இடக்கண்ணும் மாதவியின் வலக்கண்ணும் துடித்தன என்ற இலக்கியச் செய்தி கோவலனை நீண்ட காலம் பிரிந்த கண்ணகி மீண்டும் அவனைச் சேர்வாள் என்பதும் மாதவி கோவலனைப் பிரிவாள் என்பதற்கு கண் துடித்தல் முன்னறிவிப்பாகும் . கண் துடித்தலோடு பல்லி சொற் பலன் மீது ம்நம்பிக்கை கொண்டிருந்தனர் தமிழர்கள் என்பது தெளிவாகிறது .

**கனவு**

பழந்தமிழர் வாழ்வியலில் கனவும் அது தொடர்பான நம்பிக்கைகள் . சகுணங்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன . சில வேளைகளில் காணும் கனவு பலிக்கும் என்று தமிழர்கள் நம்பினர். அதிகாலைப் பொழுதில் காணும் கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை இன்றும் தமிழர்களிடையே உள்ளது . கண்ணகி தனக்கும் கணவன் கோவலனுக்கும் நடக்கப் போகும் துன்பத்தை மதுரை நகர்புறப்படும் முன்னரே கனவில் கண்டு நடுங்கினாள் என்கிறது சிலப்பதிகாரம். இதனைப் போலவே அரசி பாண்டிமாதேவியும் கனவு கண்டு துன்புற்றாள் .

அரசனின் செங்கோல் வீழ்ந்தது அரண்மனை வாசல் மணி ஒலித்தது , நான்கு திசைகளும் அதிர்கின்றன, இரவில் இந்திரனின் வில் மின்னெலெனத் தோன்றுகிறது . பகலில் விண்மீன்கள் வீழ்கின்றன. இதுகோப் பெருந்தேவி கண்ட கனவாகும்.

**பேய்**

இறந்த பின் உடல் அழிகிறது ஆன்மா அழியாமல் கல்லில் நிலை பெறுகிறது என்ற நம்பிக்கை பெருங்கற் காலத்திலிருந்து நிலவுகிறது . ஆதிதமிழர்களும் இதனை நம்பினர் . எனவே தான் குறுநில மன்னர் , தலைவன், இனக்குழு வீரன், காவல்காரன் முதலானோர் இறந்த பின்னர் அவர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடும் முறையை தியாகத்தைப் போற்றும் விதமாக வீரக்கல் எடுத்து வழிபட்டனர் . இதே வேளையில் இளவயதில் திடீரென இறந்துபட்டவர்கள் ஆன்மா பேயாக மாறி அச்சுறுத்தும் என்றும் நம்பினர் . தெய்வ நம்பிக்கை மக்களுக்கு சக்தி கொடுக்கும் என்றும் , பேய்கள் மக்களை அச்சுறுத்தி நோயை வழங்கும் என்று நம்பினர் . பேய்கள் பொதுவாக சுடுகாட்டில் நடமாடும் என்ற நம்பிக்க சங்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்**
**காடு முன்னினனே கட்காமுறுநன் "**

என்கிறது புறநானூறு.

சுடுகாட்டில் உறைந்துள்ள பேய்கள் இறந்து புதைக்கப்பட்ட வீரர்களின் பிணங்களை உண்ணும் என்று தமிழர்கள் நம்பியுள்ளனர் . **"உருகெழு பேய் மகள் , அழுகுரற் பேய்மகள் "** என்று பேய்களின் தன்மைப் பற்றி கூறப்பட்டுள்ளது . வீரர்களின் புண்ணனணப் பேய் தீண்டுமானால் அவன் இறந்து விடுவான் என்று நம்பிய தமிழர்கள் அதற்கான சில சடங்குகளையும் செய்துள்ளனர் . வேம்பு, வெண் சிறு கடுகு , நறுமணப் புகை , மணியோசை, காஞ்சியிசை ஆகியன பேயை ஓட்டக் கூடியவை என்று பழந்தமிழர்கள் நம்பியுள்ளனர் .

**முடிவுரை**

இதன்படி பண்டைத் தமிழரிடம் எண்ணற்ற நம்பிக்க்கள் தமிழர்களிடையே இருந்துள்ளன . இலக்கியங்கள் அவற்றை சரியாக எடுத்துக் காட்டியுள்ளன . மேற்கண்ட சகுணங்கள் , நம்பிக்கைகள் இன்றும் தமிழ்நாட்டில் மக்களிடையே வேரூன்றிக் காணப்படுகின்றன . காக்க வீட்டின் கூரை மேல் அமர்ந்து கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது சங்ககால நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை இன்றும் இருந்து வருகிறது . சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழர்களின் பண்பாடு அவர்களின் வாழ்வியல் சார்ந்து இருந்து வருவது சிறப்பான அம்சமாகும்.

**பார்வைநூல்கள்**


1. புறநானூறு
2. கலித்தொகை
3. சிலப்பதிகாரம், தொல்காப்பியம், அகநானூறு
4. திருக்குறள்
5. ந. சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல் NCBH, 1986, சென்னை.
6. அ. தட்சிணாமூர்த்தி தமிழர் நாகரீகமும் பண்பாடும் , வெற்றிச் செல்வி வெளியீட்டகம் , தஞ்சாவூர் 1973.